இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசுவும் அவருடைய சீடரும் எரிகோவுக்கு வந்தனர். அவர்களும் திரளான மக்கள் கூட்டமும் எரிகோவை விட்டு வெளியே சென்றபோது, திமேயுவின் மகன் பர்த்திமேயு வழியோரம் அமர்ந்திருந்தார். பார்வையற்ற அவர் பிச்சை எடுத்துக்கொண்டிருந்தார். நாசரேத்து இயேசுதாம் போகிறார் என்று அவர் கேள்விப்பட்டு, “இயேசுவே, தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்” என்று கத்தத் தொடங்கினார். பேசாதிருக்குமாறு பலர் அவரை அதட்டினர்; ஆனால் அவர், “தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்” என்று இன்னும் உரக்கக் கத்தினார். (மாற்கு 10:46-48)



# “நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது”

## உலக மறைபரப்பு ஞாயிறு - திருத்தந்தையின் செய்தி

அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே!

கடவுளுடைய அன்பின் ஆற்றலை நாம் ஒருமுறை அனுபவித்து, அவருடைய தந்தைக்குரிய உடனிருப்பை நம்முடைய தனிப்பட்ட மற்றும் குழும வாழ்வில்




கண்டுணர்ந்துவிட்டால், எதைக் கண்டோமோ, கேட்டோமோ அவற்றை பறைசாற்றாமலும் பகிராமலும் நம்மால் இருக்க முடியாது. இயேசுவினுடைய மனுவுருவாக்கம், நற்செய்தி மற்றும் பாஸ்கா மறைபொருள் ஆகியவற்றுள் நமக்கு வெளிப்படுத்தப்பட்ட மறைபொருளின்படி, இயேசு அவர்களின் சீடர்களோடும் இம்மனுக்குலத்தோடும் கொண்டிருக்கும் உறவானது, அவர் எந்தளவுக்கு நம்முடைய மனுக்குலத்தை அன்பு செய்கிறார் என்பதையும், நமது இன்ப துன்பங்கள், நம்முடைய நம்பிக்கைகள், நம்முடைய அக்கறைகள் என அனைத்தையும் அவருக்குரியதாக மாற்றிக்கொள்கிறார் என்பதையும் நமக்கு வெளிப்படுத்துகிறது. (இன்றைய உலகில் திருஅவை, எண் 22)

“நீங்கள் போய்ச் சாலையோரங்களில் காணும் எல்லாரையும் திருமண விருந்துக்கு அழைத்து வாருங்கள்” (மத் 22:9) என்பதற்கேற்ப இந்த மறைத்தூதுப் பணியில் மிகுந்த ஈடுபாடுடன் பணி செய்ய வேண்டுமென்று அவர் நம்மை அழைக்கிறார். இந்த கருணைமிக்க அன்பிலிருந்து எவரும் விலக்கிவைக்கப்படுவதில்லை. தொலைவில் இருப்பதாகவோ, நீக்கப்பட்டதாகவோ உணர வேண்டிய அவசியம் யாருக்குமில்லை.

அன்பு என்பது எப்போதும் செயல்பாட்டில் உள்ளது. ‘நாங்கள் மெசியாவைக் கண்டோம்’ (யோவான் 1:41) என்ற வியப்பு மிகுந்த நம்பிக்கை செய்தியைப் பகிரந்துகொள்ள இந்த அன்பு நம்மைத் தூண்டுகிறது.

இயேசுவுடன் நாமும் பல வித்தியாசமான செயல்பாடுகளைக் கேட்டிருக்கிறோம் பார்த்திருக்கிறோம், அனுபவித்துமிருக்கிறோம். இவை நமது நம்பிக்கை வாழ்வுக்கு உந்துதலாக உள்ளது. தொடக்கக்கால கிறிஸ்தவர்கள் பகைமைக்கும் பலவித நெருக்கடிகளுக்கும் மத்தியிலும் இறை நம்பிக்கை நிறைந்த வாழ்க்கையைத் தொடர்ந்தனர். புறந்தள்ளப்பட்ட அனுபவங்களும் அவர்களுக்கு உண்டு. போராட்டங்களையும் சிறைத்தண்டனைகளையும் அவர்கள் எதிர்கொண்டனர். ஆனாலும், அத்தனை துன்ப துயரங்களையும் இன்னல்களையும் மறைபரப்பு பணிக்கான வாய்ப்பாக அவர்கள் பார்த்தனர்.

மறைபரப்பு பணி என்பது வியாபாரப் பரிமாற்றம் மற்றும் முதலீடு போன்றதல்ல. அல்லது அது சாதாரண மனிதாபிமான செயலுமல்ல. தொடக்கத் திருஅவையைப் போல நமது காலத்திலும் மறைபரப்புப் பணி அவ்வளவு எளிதானதல்ல. இந்த பெருந்தொற்று காலத்தில் பலவித சவால்கள் நம் கண்முன் உள்ளன. எண்ணற்ற மக்கள் உடுத்த உடைக்கும், உண்ண உணவுக்கும், படுத்துறங்க பாது



**மறைபரப்பு - திருஅவை கொண்டிருக்கும் ஓர் அதிகார முத்திரை**

காப்பான இடத்திற்கும் அல்லலுறும் வேளையில், நமது பகட்டு முகத்திரையைக் கிழித்துக்கொண்டு பணிவாழ்வுக்கு முன்னோக்கிச் செல்ல நாம் அழைக்கப்படுகிறோம்.

ஆரோக்கியமான சமூக இடைவெளி என்ற பெயரில், அக்கம் பக்கம் நிலவுகின்ற வறுமையை, பசி பட்டினியை, அநீதியைக் கண்டுகொள்ளாமல் வாழும் வாழ்க்கை நமதானது அல்ல. இங்கே இரக்கமிகு மறைபரப்புப் பணிக்கான அவசர நிலை உள்ளது. சாக்குப்போக்குக்கு நம்மில் இடமில்லை.

இவ்வாண்டின் மறைபரப்பு ஞாயிறுக்கான மையக்கருத்து, “நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது” (திப 4:20) என்பதாகும். இது நம் ஒவ்வொருவரையும் சொந்தம் கொண்டாடி, நமதாக்கிக் கொள்ளவும் நாம் எதை நம்புகிறமோ அதை மற்றவர்களிடம் கொண்டுபோய் சேர்க்கவும் பணிக்கிறது.

மறைபரப்புப் பணி என்பது திருஅவை கொண்டிருக்கும் ஓர் அதிகார முத்திரை. அதாவது திருஅவை இருப்பதே நற்செய்தி அறிவிப்புக்காகத்தான். இறை நம்பிக்கை வாழ்வு என்பது எங்கும் எவரையும் ஆரத்தழுவுவதற்கும் தோழமை உணர்வில் வளர நம்மை அழைக்கிறது.

நாம் நமது சுகமண்டலத்தைவிட்டு வெளியேறி, அதனை விட்டொழித்து, நமது வட்டத்தை விரிவிப்படுத்த வேண்டும். குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டிய காலம் மாறிவிட்டது. பரந்த சிந்தனையாற்றலும் நவீன செயல்பாடும் மறைபரப்புப் பணிக்கு இன்றியமையாதவை.

# தலத்திருஅவையின் ஆயர்கள், 16-வது ஆயர்கள் மாமன்றத் தயாரிப்புப் பணிகளைத் தொடக்கினர்

தலத்திருஅவையின் ஆயர்கள் தத்தம் மறைமாவட்டங்களில் கடந்த ஞாயிறன்று ஆடம்பரத் திருப்பலிகள் நிறைவேற்றி, மாமன்றத்தின் முதல்நிலைப் பணிகளைத் துவக்கி வைத்தனர். தீபகற்ப மலேசிய மூன்று மறைமாவட்டங்களான கோலாலம்பூர் மாமறைமாவட்டம், பினங்கு மறைமாவட்டம் மற்றும் மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டம் ஆகியவற்றின் ஆயர்களாக முறையே, பேராயர் ஜூலியன் லியாவ், ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் மற்றும் ஆயர் பெர்னர்ட் பவுல் ஆகியோர் இணையதளம் வழி கொண்டாடிய சிறப்பு திருப்பலிகளில் நம்பிக்கையாளர்கள் ஆர்வத்தோடு பங்கு கொண்டனர்.

“ஒன்றித்துப் பயணம் மேற்கொள்ளும் திருஅவையாக: ஒன்றிப்பு, பங்கேற்பு, மறைத்தூது ” என்ற தலைப்பில், 2023ம் ஆண்டு அக்டோபரில் வத்திக்கானில் நடைபெறவிருக்கும் 16வது உலக ஆயர்கள் மாமன்றத் தயாரிப்புக்களின் முதல்நிலைப் பணிகள், அக்டோபர் 17, கடந்த ஞாயிறன்று தலத்திருஅவைகளில் மிக உற்சாகத்தோடு துவக்கப்பட்டுள்ளன.

16வது உலக ஆயர்கள் மாமன்றத்திற்கு, உலக அளவில் ஈராண்டு தயாரிப்புக்களுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழைப்புவிடுத்துள்ளதையடுத்து, உலகின் அனைத்து மறைமாவட்டங்களும் முதல்நிலைப் பணிகளைத் துவக்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.




திருஅவையிலிருந்து விலகியிருப்போர், அக்கறையின்றி வாழ்வோர், புறக்கணிக்கப்பட்டோர் இத்தகையோரால் திருஅவை துயருறுவது குறித்து தெளிந்துத் தேர்வதன் வழியாக, திருஅவையைச் சீர்திருத்தும் நோக்கத்தை ஆயர்கள் மாமன்றம் கொண்டருப்பதாக அன்றைய திருப்பலிகளின் மறையுரைகளில் உணர்த்தப்பட்டது.

அருள்பணித்துவ வாழ்வுமுறையை ஏற்றுள்ளோரின் ஆதிக்கம், பெண்களுக்கு எதிரான பாகுபாடு, புலம்பெயர்வோர் புறக்கணிக்கப்படல், திருஅவையில் சமூக ஏற்றத்தாழ்வு, அதிகாரத் துர்ப்பிரயோகம் போன்ற பல விவகாரங்கள் குறித்து ஆய்வுகள் செய்யப்படவேண்டியுள்ளன என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

# மரண தண்டனை ரத்து செய்ய வேண்டும்

## கி.சீலதாஸ்

மரண தண்டனை முழுமையாக அகற்றுவதா வேண்டாமா என்பதே இன்றைய நாகரீக உலகின் வருத்தும் கேள்வியாக உள்ளது. அக்டோபர் பத்தாம் தேதியை உலக மரண தண்டனை எதிர்ப்பு தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் 192 உறுப்பு நாடுகளில் 140 நாடுகள் மரண தண்டனையைத் தடைசெய்துவிட்டன.

மூன்று முறை, ஐக்கிய நாடுகளின் பொது அவை பெரும்பான்மை வாக்குகளின் ஆதரவோடு மரண தண்டனையை நிறுத்தி வைக்கும்படி தீர்மானங்களை நிறைவேற்றியது. இதன்வழி மரண தண்டனையை முழுமையாகவே நிறுத்திவிட வழிகோலும் என்ற நம்பிக்கையும் வலுவடைந்தது. ஆயினும், பல நாடுகள் குறிப்பாக, சீனா, இந்தியா, ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர் உட்பட மரண தண்டனையைத் தடைசெய்ய முன்வரவில்லை. இதற்கான காரணத்தை ஆய்ந்துப் பார்த்தால் கடும் தண்டனை மூலம் குற்றச்செயல்களுக்கு நிரந்தர தீர்வுகாண முடியும் என்ற போலி நம்பிக்கையே. மலேசியாவைப் பொருத்த வரையில் ஐக்கிய நாடுகளின் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. மரண தண்டனையை அகற்றும் கருத்தரங்கு ஒன்று முன்னாள் அமைச்சர் குலசேகரன் தலைமையில் நாடாளுமன்ற வளாகத்தில் நடந்தது. உலகின் பல நாடுகளிலிருந்து பேராளர்கள் வந்து கலந்து கொண்டார்கள். நானும் கலந்துகொண்டேன்.



அரசியல் நாகரிகம் பண்படாத காலத்திலிருந்தே கடுமையான தண்டனைகள் மூலம் குற்றச்செயல்களைத் தடுத்துவிட முடியும் அல்லது குற்றச்செயல்களில் கணிசமான குறைவைக் காண முடியும் என்ற நம்பிக்கை வெறும் அகங்காரத்தின் சின்னமாகத் திகழ்ந்ததே அன்றி குற்றச்செயல்களைக் குறைக்கும் தரத்தை ஒருபோதும் கொண்டிருக்கவில்லை என்பது கண்கூடு. சமயங்கள் கூட காலங்காலமாக குற்றச் செயல்கள் நரகத்துக்கு வழிகாட்டுமேயன்றி சொர்க்கத்துக்குக் கடப்பிதழாகத் திகழாது என்பதை அன்றாடம் வலியுறுத்திய போதிலும் குற்றச்செயல்கள் அல்லது சமய மரபுப்படி பாவச் செயல்களின் எண்ணிக்கை குறைந்ததாகத் தெரியவில்லை. இப்போது விஞ்ஞானத்தின் முன்னேற்றமானது குற்றச்செயல்கள் நவீன அணுகுமுறைகளுக்கான பட்டறையாகத் திகழ்கின்றது. விஞ்ஞானம் செழிப்பான நிலமாக, அதில் புதுப்புது குற்றச்செயல்கள் முளைத்து, வளர்ந்து ஆபத்தான குற்றவியல் கலாச்சாரம் வளர்வதைக் காண்கிறோம்.

சமய வேறுபாடு சமயங்களிடையே பொறுமையற்ற தரம், தம் சமயமே சிறந்தது, பிற சமயங்களை இழித்தும், பழித்தும் வசை பாடுவதும், ஒரு சமயத்தைச் சார்ந்தவர் மட்டும்தான் சொர்க்கத்திற்குப் போவதற்கான தகுதியைக் கொண்டிருப்பது போலவும் மற்ற சமயத்தினருக்கு நரகம்தான் இறுதி குடியிருப்பு என்று ஏளனமாகப் பேசுவது, வர்ணிப்பது வாழையடி வாழையாக வளர்ந்துவிட்ட மனித சுபாவமாகும். (தொடரும்....)

### ஆயர்கள் மாமன்றம், நாடாளுமன்றம் அல்ல

உலக ஆயர்கள் மாமன்றம், உலக அரசுகள் நடத்தும் நாடாளுமன்றம் அல்ல என்பதை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நினைவூட்டினார். கருத்து வேறுபாடுகள் ஏற்படும்போது, பெரும்பான்மை பலத்தைப் பெறுவதற்கு பாராளுமன்றங்கள் முயற்சி செய்வது போல், உலக ஆயர்கள் மாமன்றத்தின் விவாதங்கள் நடைபெறாது என்பதை வலியுறுத்தியுள்ளார்.

# புதிய மறைபரப்பு நமது வாழ்வாகட்டும்

## அருள்தந்தை பீட்டர் அந்தோணி

பொதுநிலையினருக்கான உருவாக்கப் பயிற்சி zoom செயலி வழியாக கடந்த ஒரு ஆண்டாக கனிதரும் சீடத்துவ குழுவினரால் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த 03-10-2021 அன்று நடைபெற்ற உருவாக்கப் பயிற்சியை கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தைச் சார்ந்த தம்பின் புனித ஜோன் மரிய வியான்னி தேவாலய பங்குத்தந்தை அருள்பணியாளர் பீட்டர் அந்தோணி அவர்கள் ‘மறைபரப்பு’ என்ற தலைப்பில் வழங்கினார். ஏறக்குறைய 90 நிமிடங்கள் நடைபெற்ற இப்பயிற்சியில் கத்தோலிக்க மறைபரப்பு பணியையும் உண்மையான சீடத்துவத்தின் தன்மையையும் திருவிவிலியத்தின் அடிப்படையில் தெளிவாக எடுத்துரைத்து, திருஅவையில் மறைபரப்பு என்பதை விளக்கினார்.

"மறைபரப்பு" என்ற வார்த்தைக்கு, "நற்செய்தியின் தொடர்பு" - அதாவது இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்புவது என்பதாகும். தொடர்ந்து ஆரம்ப கிறிஸ்துவர்கள் மறைபரப்பு செய்த விதம் குறித்தும் அவர்கள் எவ்வாறு சாட்சியம் வழியாயும், ரோமானிய வழியாயும் மறைபரப்பு செய்தார்கள் என்பதை விளக்கினார். கடவுள் திருஅவையை கட்டி எழுப்ப சாதாரண மனிதர்களையே பயன்படுத்தினார். எனவே இன்றைய திருஅவையை கட்டி எழுப்பி மறைபரப்பு பணி செய்வது பலவீனமான நமது கடமையே என்றார். நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள் (மத் 28:19), என்பதே ஒவ்வொரு கத்தோலிக்கரின் மறைபரப்பு கடமை என்பதை விவரித்தார்.

அடுத்து மூன்றாவது ஞாயிறன்று (17-10-2021) இப்பயிற்சியின் இரண்டாவது பகுதியில் கடவுள் கொடுக்கும் அருள்கொடை நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவோடு இணைந்து வாழும் நிலைவாழ்வு என்பதை புதிய மறைபரப்பு பணி வழியாக சிறப்பாக விளக்கினார். புதிய மறைபரப்பு என்பது புதிய செய்தியை முன்மொழிவதல்ல, ஏனெனில் இதுவும் இயேசுவின் நற்செய்தியே. அந்த முக்கிய செய்தியான மீட்பு என்பது இயேசுவிடமிருந்தே வருகிறது. எனவே ஒவ்வொரு வரும் தனது சொந்த நம்பிக்கையை ஆழப்படுத்தவும், நற்செய்தியில் நம்பிக்கை கொள்ளவும், நற்செய்தியைப் பிறரிடம் பகிர்ந்து கொள்ள விருப்பம் கொள்வதற்குமான ஒரு அழைப்பு. திருமுழுக்கு பெற்ற கத்தோலிக்கர் அனைவரும் புதிய மறைபரப்பு பணியின் சவாலில் பங்கெடுக்க அழைக்கப்படுகிறோம். புதிய மறைபரப்பு என்பது மறைபோதகர்கள், அருள்பணியாளர்கள், திருத்தொண்டர்கள் மற்றும் துறவற சபையினரின் பொறுப்பு / கடமை என்பதல்ல மாறாக இறைமக்கள் ஒவ்வொருவரின் முக்கிய கடமை ஆகும்.

நமது வாழ்க்கையின் நம்பிக்கை இயேசு ஒருவரே. புதிய மறைபரப்பு உண்மையில்



அருள்பணி பீட்டர் அந்தோணி

மறுமலர்ச்சியின் மறைபரப்பு ஆகும். திருமுழுக்கினால், இறைமக்களின் அனைத்து உறுப்பினர்களும் மறைபரப்புச் சீடர்களாகியுள்ளனர் (மத் 21:19). அனைத்துத் திருமுழுக்குப் பெற்றவர்களும், திருஅவையில் எந்த நிலையில் இருந்தாலும் அல்லது எந்த அளவுக்கு அவர்கள் நம்பிக்கை போதனையில் ஆழமாக உள்ளனர் என்றாலும், அனைவரும் நற்செய்தி அறிவிப்புப் பணியின் முகவர்களாக உள்ளனர். (நற்செய்தியின் மகிழ்ச்சி,120).

இந்த மாத பகிர்வில் ஏறக்குறைய 60 பேர் கலந்து கொண்டனர். தந்தை அவர்கள் பங்கேற்பாளர்களின் கேள்விகளுக்கு சிறப்பாக பதில் அளித்து இறுதி ஆசீரும் வழங்கினார். இக்குழுவின் தலைவர் M. செல்வராஜூ அவர்களின் நன்றியுரையோடு இப்பயிற்சி ஒரு நிறைவைக் கண்டது.

*-த.ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா*

# மறைதூதுரைப்போம்! சோர்வடையோம்!

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 30-ம் ஞாயிறுவில் நாம் இணைந்துள்ளோம். மேலும் இன்று மறைபரப்பு ஞாயிறு தினத்தையும் அகில உலக திருஅவையோடு நினைவுகூர்கிறோம். முதல் வாசகத்தில் பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து யூதர்களை விடுவித்து தாய் நாட்டுக்கு இறைவன் அழைத்துச் சென்றதை எரேமியா இறைவாக்கினர் விவரிக்கிறார். அழுகையோடு அவர்கள் திரும்பி வருவார்கள்; ஆறுதலளித்து அவர்களை நான் அழைத்து வருவேன்; நீரோடைகள் ஓரமாக அவர்களை நான் நடத்திச் செல்வேன்; இடறிவிழாதவாறு சீரான வழியில் அவர்கள் நடக்கச் செய்வேன் என்ற இறைவனின் நம்பிக்கை வாக்குறுதியை எரேமியா எடுத்தியம்புகிறார்.

நாம் நேர்மையுள்ளத்தோடு துவக்கும் ஒவ்வொரு காரியத்திலும் இறைவன் நம்மோடு இருந்து வழிநடத்திச் செல்வார் என்பதும் நமது இலக்கை அடைய முடியும் என்பதும் திண்ணம்.

இன்றைய இரண்டாம் வாசகத்தில் நம் தலைமை குருவாக உள்ள ஆண்டவர் மக்களின் துன்பத்தில் பங்குக் கொள்பவர் என்பதும் தந்தையால் இப்பணிக்காக உலகிற்கு அனுப்பப்பட்டவர் என்பதும் தெளிவாகிறது.

நற்செய்தியில் பார்வையற்ற பர்த்திமேயு இயேசுவின் உடனிருப்பை நன்கு பயன்படுத்திக் கொள்கிறார். பார்வையற்ற அவர் நம்பிக்கை இழக்காமல், விரக்தி கொள்ளவில்லை. தாவீதின் மகனாகிய ஆண்டவர் ஆழ்மனதிலிருந்து வந்த அவரது வேண்டலைக் கேட்டார், அவரைத் தொட்டார். பிறர் தடுத்தும் அவரது குரல் கேட்கப்பட்டது.

நம் கதறலும் இவ்வாறாகத்தான் இருக்க வேண்டும். பொறுமையும், விடாமுயற்சியும் இன்றியமையாதவை.

மேலும், ‘நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது” (திப 4:20) எனும் கருத்தோட்டத்தில் இன்று திருஅவை மறைபரப்பு ஞாயிறுவைக் கொண்டாடுகிறது. மறைபரப்புக்கான அழைப்பு கடந்த காலத்தைச் சார்ந்த ஒன்றல்ல. இந்த பெருந்தொற்று காலத்திலும் நாம் மறைபரப்பில் ஆழ்ந்திருக்க அழைக்கப்படுகிறோம்.

இறைவன் இந்த உலகைக் குறித்து இன்னும் களைப்படையவில்லை ” என இந்திய கவி இரவீந்திரநாத் தாகூர் கூறியிருந்தார். நாம் ஒவ்வொருவரும் இவ்வுலகிற்கு ஒரு பரிசாக அனுப்பப்பட்டுள்ளோம். நாம் பெற்ற திருமுழுக்குக்கு சிறப்பு காரணம் உண்டு. நமக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள அந்தக் குறிக்கோளை வேறு ஒருவராலும் நிறைவேற்ற முடியாது. ஆகவே கிறிஸ்தவர்களாகிய எமது நோக்கம் நற்செய்தியை அறிவிப்பதே என்பதாகும். உன் பெயர் சொல்லி அழைத்ததும் நாமே. உன்னை உள்ளங்கையில் பொறித்ததும் நாமே. தாயின் கருவில் உன்னை அறிந்தோம். நீ உருவாகும் முன்பே தெரிந்தோமே. நீ வரவில்லை என்றால் யாரை நாம் அனுப்புவோம் எம் மந்தையை வழி நடத்துவதற்கு. விவிலியத்தில் ஏரேமியா புத்தகத்தில் காணப்படும் இந்த இறை வார்த்தைகள் மறைபரப்புவது நமது ஒவ்வொருவரின் கடமை என சுட்டிக் காட்டுகின்றது. மறைபரப்புப்பணியில் ஒன்றிப்போம், பங்கெடுப்போம். மறைப்பின் விண்மீனாக விளங்கும் அன்னை மரியின் பரிந்துரையை நாடுவோம்.

*-லூர்தம்மாள் ஆரோக்கியசாமி, காஜாங்*

**பொதுக்காலம் 30-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம்: | எரே 31:7-9 |
| தி. பாடல்: | 126: 1-2ab. 2cd-3. 4-5. 6 |
| 2ம் வாசகம்: | எபி 5: 1-6 |
| நற்செய்தி: | மாற்கு 10: 46-52 |

ஞாயிறு வாசகம் ஆண்டு 2
வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 1
திருப்புகழ் மாலை -வாரம் 2